தீக்கதிர்
17-06-2024 # மதுரை

# சிபிஎம் அலுவலகம் மீது தாக்குதல்: மக்கள் கண்காணிப்பகம் கண்டனம்

மதுரை, ஜூன் 16-

நெல்லையில் சாதி மறுப்பு திருமணம் நடத்தியதால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது நடத்திய கொடூர தாக்குதல் மற்றும் அலுவலகம் அடித்து சூறையாடப்பட்ட சம்பவத்தை மக்கள் கண்காணிப்பகம் மற்றும் மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும். காதல் திருமணம் செய்த இருவருக்கும் நிரந்தரமான பாதுகாப்பை வழங்கியும். இவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு பணியும் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் நிர்வாக இயக்குநர் ஹென்றி திபேன் தெரிவித்துள்ளார்.